**செய்தி வெளியீடு எண் : 631** **நாள்: 18.04.2022**

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், இன்று (18.4.2022) நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்று வரும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.**

---

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி மைய கூட்ட அரங்கில் இன்று (18.4.2022) தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளை தரமானதாகவும், விரைவுப்படுத்தவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டார்கள்.

2021 - 2022 ஆம் ஆண்டின் நிலுவைப் பணிகள் அனைத்தையும், முதல் காலாண்டிற்குள் கண்டிப்பாக முடிக்க வேண்டும் என்றும், சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் கட்டாயமாக போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்றும், 5 ஆண்டுகள் காலமுறை சுழற்சி முடிவுற்ற சாலைகளை மட்டுமே உறுதிப்படுத்தல் பணிகளுக்கு தேர்வு செய்ய வேண்டும் என்றும், நகர்ப்புற சாலைகளை அகலப்படுத்த முன்மொழியும்போது சாலையின் விளிம்புவரை அகலப்படுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சாலைப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் “இன்னுயிர் காப்போம்“ திட்டத்தைச் செயல்படுத்த மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., சென்னை - கன்னியாகுமரி தொழிற்தட திட்ட இயக்குநர் திரு.கே.பாஸ்கரன் இ.ஆ.ப., அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பங்கு கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in